தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1982 பிப்ரவரி, 5

தை 23, துன்மதி, திருவள்ளுவர் 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடுஅறச்
சொல்தெரிதல் வல்லா ரகத்து. "

குற்றம் நீங்கச் சொற்களை ஆராயும் வன்மையுடையார், அவையின்கண் பல நூல்களையும் கற்று அறிந்தவரின் கல்வி விளக்கமுறும்.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4 ஆம் நாளன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். சுப்பிரமணியக் கவுண்டர் அவர்கள் 1952–53 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் மேச்சேரி தொகுதியிலிருந்தும் 1957 ஆம் ஆண்டில் இருந்து 1962 ஆம் ஆண்டு வரை மற்றும் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை சங்ககிரி தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றும் மேலும் 1958–59 மற்றும் 1964–65 ஆம் ஆண்டுகளில் மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகவும் நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். இவர் சேலம் மாவட்டக் கூட்டுறவு வங்கித் தலைவராக இருந்து கூட்டுறவு இயக்கத்தில் சிறந்த ஈடுபாடு கொண்டு பல பொறுப்புக்களை வகித்துள்ளார். சேலம் மாவட்டத்தில் அன்றைய மாவட்டக் கழக (டிஸ்டிரிக்ட் போர்டு) தலைவராகவும் இவர் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.

2. வினாக்கள்—விடைகள்

*உக்குறியிட்ட வினாக்கள்.

புதிய மீன்பிடி கப்பல்கள் வாங்கும் திட்டம்.

*வினா எண் 41—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மீன்வள வளர்ச்சிக் கழகத்திடம் புதிதாக மீன்பிடி கப்பல்கள் வாங்கும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், புதிதாக (பர்சீன்) படகுகள் வாங்கும் உத்தேசம் உண்டா ?

(இ) எவ்வாறு கப்பல்களும் படகுகளும் பயன்படுத்தப்படுகின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(ஆ) ஆம். 6 பர்சீன் படகுகளும் 2 இணைப் படகுகளும் (Carrier Vessel) வாங்கும் திட்டம் கழகத்தால் பரிசீலிக்கப்பட்டு அவற்றில் ஐந்து படகுகள் கட்டி முடிக்கப்பட்டு மீன் பிடிப்பில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இரண்டு இணைப் படகுகளும் வாங்கப்பட்டு பர்சீன் படகுகளுடன் பயன்படுத்தப்படுகின்றன.

(இ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் இரண்டு 'தஞ்சை', 'நெல்லை' என்ற 23 மீட்டர் நீளமுள்ள இழு படகுகள் (Trawlers) விசாகப்பட்டினத்தில் இறால் மீன்கள் அதிகம் கிடைப்பதால் இறால் மீன் பிடிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 57 அடி நீளமுள்ள 'முல்லை', 'மருதம்' இழு படகுகள் (Trawlers) மண்டபம் அருகில் காரல்